சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 30.07.2024 SC.129/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.4**

---

முதல் விசாரணை

நான் கூடலூர் தம்மணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு மாலை போட்டிருந்தேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தம்மணம்பட்டியில் உள்ள ஐயப்பன் கோவிலில் சுமார் மதியம் 2.30 மணிக்கு இருந்தேன். அப்போது சண்டை நடந்ததாக என்னிடம் சொன்னார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ராஜாவுக்கும் நல்லதம்பிக்கும் சண்டை நடந்ததாக சொன்னார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 30.07.2024 SC.129/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வம் | | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : | | | வயது | : |
| விலாசம் | : | | | | |

**அ.சா.5**

---

முதல் விசாரணை

நான் கூடலூர் தம்மணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு வேலைக்கு போய் விட்டு வந்தேன். போலிஸ்காரர்கள் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கைரேகை என்னுடையது அல்ல. நான் கையொப்பம் தான் செய்தேன்.

**<u>அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக நீதிமன்ற அனுமதியின்பேரில் மாற்றப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்</u>**

கடந்த 03.01.2019ம் தேதி இரவு 10.00 மணிக்கு என்னையும் எங்கள் ஊரைச்சேர்ந்த செம்பிஅழகன் மகன் சக்கையராஜ் என்பவரையும் கூடலூர் தெற்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தில் பார்வை மகஜரும் மாதிரி வரைபடமும் தயார் செய்து சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் போட்டோம் என்றும், தற்பொழுது எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 30.07.2024 SC.129/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்து | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | தங்கம் | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.6**

---

முதல் விசாரணை

நான் கூடலூா் தம்மணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு நான் வேலைக்கு போய் விட்டு கூடலூர் பெட்ரோல் பல்க் முன்பு நின்று கொண்டிருந்தேன். போலிஸ்காரர்கள் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து **அ.சா.ஆ.2**. அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.3**.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக நீதிமன்ற அனுமதியின்பேரில் மாற்றப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்**

கடந்த 04.01.2019ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் எங்கள் தெருவில் குடியிருக்கும் பழனி, த/பெரெங்கசாமி ஆகிய இருவரும் கூடலூர் பெட்ரோல் பல்க் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது கூடலூர் தெற்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வழக்கு விசயமாக விபரம் சொல்லி ராஜா, த/பெ.மாயாண்டித்தேவர், தம்மணம்பட்டி, கூடலூர் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நாங்கள்இருவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 30.07.2024 SC.129/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பழனி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : | ரெங்கசாமி | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.7**

---

முதல் விசாரணை

நான் கூடலூர் தம்மணம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நான் வேலைக்கு போய் விட்டு கூடலூர் பெட்ரோல் பல்க் முன்பு நின்று கொண்டிருந்தேன். போலிஸ்காரர்கள் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.4**. அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ.5**.

**<u>அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக நீதிமன்ற அனுமதியின்பேரில் மாற்றப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்</u>**

கடந்த 04.01.2019ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும் எங்கள் தெருவில் குடியிருக்கும் தங்கம் மகன் முத்து ஆகிய இருவரும் கூடலூர் பெட்ரோல் பல்க் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது கூடலூர் தெற்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் வழக்கு விசயமாக விபரம் சொல்லி ராஜா, த/பெ.மாயாண்டித்தேவர், தம்மணம்பட்டி, கூடலூர் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் நாங்கள்இருவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.